1973 மார்ச் 19]

திரு. கு. காமாட்சி: அமைய இருக்கின்ற கிராம நீதிமன்றங்களில் வழக்காடுவதும், தீர்ப்பு வழங்குவதும் தமிழிலேதான் இருக்கவேண்டுமென்று அரசு சட்டம் கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெரும்பாலும் தமிழுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

Honorary Presidency Magistrates

* 421 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of posts of Honorary Presidency Magistrates which were vacant in Madras as on September 1972; and

(*b*) the reasons for keeping them vacant?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1972 செப்டம்பர் திங்கள் நிலவரப்படி, சென்னை மாநகரில் 45 ஊதியம் பெறா மாநகர மாஜிஸ்டிரேட் பதவிகளும், 3 ஊதியம்பெறா சிறப்பு மாநகர மாஜிஸ்டிரேட் பதவிகளும் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன.

(இ) விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசி நாள் 31—10—1972 என்று குறிப்பிட்டு, அதற்குள் விண்ணப்பங்கள் அனுப்புமாறு அரசு அறிவிப்பு வெளியிட்டது. இந்த நாளுக்குள் மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட்டுக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ளவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பின்னர் தெரிந்தெடுக்கப்படும். மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட்டிடமிருந்து செயற்குறிப்புகள் அனுப்பப்படுமென அரசு எதிர்பார்த்துள்ளது.

THIRU N. DENNIS: Sir, may I know whether any general qualification is prescribed for the appointment of a person as Honorary Magistrate and whether any allowance is given to him and if not, whether the Government will consider such proposals?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னாலே கூறியபடி ஆனரரி மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்கப்படுபவர்கள் 35 வயதிலிருந்து 65 வயதிற்குட்பட்டு இருக்க வேண்டும். மாநில மொழில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். நல்ல பண்பாடு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றுதான் வைத்திருக்கிறோம்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளுக்குச் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்லவில்லை, அநேகமாகச் சட்டம் படிக்காதவர்கள் கௌரவ

மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பதால் வழக்குரைஞர்கள் அவர்களிடம் வழக்கு வழக்கைப்பற்றி எடுத்துரைப்பதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சட்டம் படித்தவர்களையும், பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற வழக்குரைஞர்களையும் நீதிபதிகளையும் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டம் படிக்காதவர்கள் ஆனரரி மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பதில் சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. சட்டம் படிக்காதவர்களாக இருந்தாலும் அனுபவம் பெற்றவர்கள் இந்த பதவிக்குத் தகுதிபெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால் சட்டம் படித்தவர்களும், வழக்குரைஞர்கள், நீதிபதிகள் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் இருந்தால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். உதாரணமாக திருச்சி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் ஆனரரி மாஜிஸ்டிரேட்டாகப் பணியாற்றியிருக்கிறார். அப்படிப்பட்டவர்கள் இல்லாத இடங்களில் மற்றவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

Magistrates under suspension

*422 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of (i) Sub-Judges (ii) District and Sessions Judges and (iii) Sub-Magistrates, who are now under suspension;

(*b*) the period for which they are under suspension; and

(*c*) the steps taken to clear their cases soon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) துணை நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதி எவரும் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்படவில்லை. சப்-மாஜிஸ்டிரேட் ஒருவர் 26—10—1970-லிருந்தும் கூட்டு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஒருவர் 30—1—1971-லிருந்தும் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

(உ) சப்-மாஜிஸ்டிரேட்டைப் பொறுத்தவரை விசாரணை அதிகாரியின் (மாவட்ட நீதிபதி, மதுரை) அறிக்கை, உயர்நீதி மன்றத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை. கூட்டு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டை பொறுத்தமட்டில், சேலம் கூட்டு மாவட்ட நீதிபதி விசாரணை நடத்தியதன் பேரில் அவர் தெரிவித்த முடிவுகள் உயர்நீதி மன்றத்தின் ஆய்வில் உள்ளன.